செ.வெ.எண்: 66 24.02.2017

# மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழகத்தில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் புகழாரம்.

புதுக்கோட்டை நகராட்சி திலகர் திடலில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69வது பிறந்தநாளினை முன்னிட்டு சிறப்புப் புகைப்பட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (24.02.2017) திறந்து வைத்தார்.

இந்த சிறப்பு புகைப்படக்கண்காட்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து கூறியதாவது:

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69-வது பிறந்த நாளினை முன்னிட்டு தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு புகைப்பட கண்காட்சி அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் இந்த சிறப்பு புகைப்பட கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த புகைப்படக்கண்காட்சியில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய திட்டங்களான அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம், அம்மா திட்டம், முதலமைச்சரின் சூரியமின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்த புகைப்படங்களும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இடம்பெற்றுள்ளது.

மேலும் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் தமிழகஅரசின் சாதனை விளக்க செய்தி படங்களும் பொதுமக்களுக்கு திரையிட்டு காண்பிக்கப்பட்டது. மேலும் இப்புகைப்படக்கண்காட்சி இன்று (24.02.2017) முதல் 25.02.2017 வரை இரண்டு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இதன் மூலம் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழகத்தில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். எனவே, இந்த புகைப்பட கண்காட்சி மூலம் பொதுமக்கள் தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களையும் அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஆர்.கார்த்திக்தொண்டைமான், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.இராஜசேகரன், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.வி.சி.ராமையா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.க.பிரபாகரன் (செய்தி), திரு.ரா.ராமசுப்பிரமணியன் (விளம்பரம்), நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜுவாசுப்பிரமணியன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.எஸ்.ஏ.எஸ்.சேட் என்ற அப்துல் ரகுமான், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**